RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 112 | ஏப்ரல்.29 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# கொடைக்கானலில் முதல்வர் ஸ்டாலின் சைக்கிள் பயணம் : வாக்கிங் போக பொதுமக்களுக்கு 'அட்வைஸ்'

பழநி: ஏப்.29-

கொடைக்கானலில் 3வது நாளாக நடைப்பயிற்சியில் ஈடுபட்ட முதல்வர் ஸ்டாலின், ஆரோக்கியமாக இருக்க, வாக்கிங் போங்கஞ் என்று பொதுமக்களுக்கு 'அட்வைஸ்' செய்தார். தொடர்ந்து ஏரியைச் சுற்றி முதல்வர் சைக்கிளில் வலம் வந்தார்.

தமிழக சட்டப்பேரவை தேர்தல் வாக்குப்பதிவு நடந்து முடிந்துள்ள நிலையில் கொடைக்கானலில் 5 நாட்கள் தங்கி ஓய்வெடுப்பதற்காக குடும்பத்துடன் முதல்வர் ஸ்டாலின் வந்துள்ளார். கடந்த 2 நாட்களாக நட்சத்திர ஏரி, மனோ ரஞ்சிதம் அணைப் பகுதியில் முதல்வர் நடைப்பயிற்சியில் ஈடுபட்டார்.

3வது நாளான நேற்று (ஏப்.28) காலை நட்சத்திர ஏரி பகுதியில் நடைப்பயிற்சியில் ஈடுபட்டார் முதல்வர். அப்போது, ஆரோக்கியத்துடன் இருக்க தினமும் 'வாக்கிங் போங்கஞ்' என்று பொதுமக்களுக்கு 'அட்வைஸ்' செய்தார். அப்போது, பொதுமக்கள், சுற்றுலாப் பயணிகள் அவருடன் செல்போனில் புகைப்படம் எடுத்து




கொண்டனர்.

இடையில் ஒரு ஹோட்டலில் அமர்ந்து, டீ அருந்தியவாறு சிறிது நேரம் ஓய்வெடுத்தார். பின்னர், நட்சத்திர ஏரியைச் சுற்றி சைக்கிள் பயணம் மேற்கொண்டார். முதல்வர் ஸ்டாலின் சைக்கிள் பயணம் மேற்கொள்வதை அறிந்த ஏராளமான பொதுமக்கள் சாலையோரம் நின்று, அவருக்கு கையசைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். அவரும் பொதுமக்களைப் பார்த்து கையசைத்தவாறே சைக்கிள் பயணம் மேற்கொண்டார்.

பின்னர், காரில் ஏறி தங்கும் விடுதிக்கு முதல்வர் திரும்பினார். இன்றை தினம் கொடைக்கானல் மேல் மலை கிராமமான மன்னவனூரில் உள்ள மத்திய அரசின் செம்மறி ஆடு ரோம உற்பத்தி ஆராய்ச்சி மையத்தில் உள்ள ஆடு மற்றும் முயல் பண்ணை, வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள சூழல் சுற்றுலா மையத்தை முதல்வர் பார்வையிட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## திருச்செந்தூர் கோயிலில் தவெக தலைவர் விஜய் சாமி தரிசனம்

திருச்செந்தூர்: ஏப்.28-

தவெக தலைவர் விஜய் 28.4.2026 அன்று காலை திருச்செந்தூர் முருகன் கோயிலில் சாமி தரிசனம் செய்தார். அப்போது அவருக்கு பூரண கும்ப மரியாதை வழங்கப்பட்டது.

தமிழகத்தில் கடந்த 23ம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற்றது. இதில் 85 சதவீத வாக்குகள் பதிவாகின. இந்த தேர்தலில் தவெக சார்பில் 233 தொகுதிகளில் வேட்பாளர்கள் போட்டியிட்டனர். சேலம் மாவட்டம் எடப்பாடி தொகுதியில் மட்டும் சுயேச்சை வேட்பாளருக்கு ஆதரவு வழங்கியது தவெக. தேர்தலை முன்னிட்டு மாநிலத்தின் பல்வேறு நகங்களில் விஜய் பரப்புரை மேற்கொண்டார்.

வரும் மே 4ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது. இந்நிலையில், விஜய் திருச்செந்தூர் முருகன் கோயிலில் சாமி தரிசனம்



செய்துள்ளார்.

இதற்காக சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் மதுரை நகருக்கு அவர் வந்தார். தொடர்ந்து அங்கிருந்து காரில் திருச்செந்தூர் சென்றார். அங்கு கடற்கரையில் கால்களை அவர் நனைத்தார்.

பின்னர் கோயிலிக்குள் சென்று மூலவரான சுப்பிரமணியசுவாமியை தரிசனம் செய்தார். தொடர்ந்து அவருக்கு பூரண கும்ப மரியாதை செய்யப்பட்டது. அவருடன் தவெக பொதுச் செயலாளர் ஆனந்த், கட்சி தொண்டர்களும் பங்கேற்றனர். அப்போது அவருக்கு வெற்றிவேல் நினைவு பரிசாக வழங்கப்பட்டது. தரிசனத்தை முடித்துக் கொண்ட பிறகு அவர் அங்கிருந்து புறப்பட்டார்.

முருகனின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் கடற்கரையோரம் அமைந்துள்ள ஸ்தலம் ஆகும். இந்தக் கோயிலுக்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து, முருகனை வழிபடுவது வழக்கம்.

## வேளச்சேரி பரங்கிமலை மின்சார ரயில் சேவைக்கு அமோக வரவேற்பு: தினமும் 28,000+ பேர் பயணம்

சென்னை: ஏப்.29-

வேளச்சேரி பரங்கிமலை இடையே பறக்கும் மின்சார ரயில் சேவை தொடங்கி 42 நாட்களை கடந்த நிலையில், நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. தற்போது நாள்தோறும் 28 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பயணிக்கின்றனர்.

இத்தடத்தில் உள்ள புழுதிவாக்கம் நிலையத்தில் மின்தூக்கி, நகரும் படிக்கட்டு போன்ற வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சென்னையின் பொது போக்குவரத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது புறநகர் மின்சார ரயில் சேவை. சென்ட்ரல், கடற்கரை நிலையங்களில் இருந்து பல்வேறு இடங்களுக்கு மின்சார ரயில்கள் இயக்கப்படுகின்றன.

இதில் கடற்கரை வேளச்சேரி இடையே இயக்கப்படும் பறக்கும் ரயில் வழித்தடத்தில் தினசரி ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் பயணிக்கின்றனர்.

இதற்கிடையே, சென்னை கடற்கரை வேளச்சேரி பறக்கும் ரயில் தடத்தின் விரிவாக்கமாக, வேளச்சேரி பரங்கிமலை திட்டப்பணிகள் தொடங்கப்பட்டு 17 ஆண்டுகளுக்



குப் பிறகு, கடந்த மார்ச் 14ம் தேதி ரயில் சேவை தொடங்கியது.

இந்த வழித்தடம் மடிப்பாக்கம், கீழ்க்கட்டளை, புழுதிவாக்கம், ஆதம்பாக்கம், வேளச்சேரி உட்பட சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு பேருதவியாக உள்ளது. இத்தடத்தில் ஆரம்பத்தில் தினசரி 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் பேர் பயணித்தனர்.

இது படிப்படியாக அதிகரித்து, தற்போது தினசரி 28 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பயணிக்கின்றனர். பரங்கிமலை ரயில் நிலையம் ஒரு முக்கிய போக்குவரத்து மையமாகத் திகழ்வதால் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்த நிலையத்தில் இருந்து புறநகர் மின்சார ரயில்கள், மெட்ரோ ரயில்கள் மூலமாக சென்னை நகரின் பல்வேறு இடங்களுக்கு எளிதில்செல்ல முடியும். இந்த ஆண்டு இறுதிக்குள் இத்தடத்தில் தினசரி பயணிப் போர் எண்ணிக்கை 30 ஆயிரத்தை கடந்து விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆதம்பாக்கம் நிலையம் அதே நேரம், ஆதம்பாக்கம் ரயில் நிலையத்தை விரைவில் திறக்க வேண்டும் என்றும், புழுதிவாக்கம் ரயில் நிலையத்தில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்றும் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து, புழுதிவாக்கத்தைச் சேர்ந்த ஜி.சிவக்குமார் கூறும்போது, ''பரங்கிமலை வேளச்சேரி தடத்தில் உள்ள புழுதி வாக்கம் நிலையம் தற்போது பரபரப்பாக காணப்படுகிறது. ஆனால், இந்த நிலையத்தில் பயணிகளுக்கான அடிப்படை வசதிகள் போதுமானதாக இல்லை.

மின்தூக்கிகள், நகரும் படிக்கட்டு வசதிகளை ஏற்படுத்தி, முறையாகப் பராமரிக்க வேண்டும். ரயில் நிலையம், தூய்மையாகவும், சுகாதாரமாகவும் பேணப்பட வேண்டும். அதேபோல், ஆதம்பாக்கம் ரயில் நிலையத்தை விரைவில் மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும்'' என்றார்.

இதுகுறித்து, சென்னை ரயில்வே கோட்ட அதிகாரிகள் கூறும்போது, "புழுதிவாக்கம் நிலையத்தில் மின்தூக்கி, நகரும் படிக்கட்டு போன்ற வசதிகளை ஏற்படுத்தும் பணி செயல்பாட்டில் உள்ளது. ஆதம்பாக்கம் ரயில் நிலையம் மக்கள் பயன்பாட்டுக்கு விரைவில் திறக்கப்படும்" என்றனர்.

## காஸ் டேங்கர் லாரி உரிமையாளர்கள் காலையில் வேலை நிறுத்தம் மாலையில் திரும்ப பெற்றனர்

நாமக்கல்: ஏப்.28-

வாடகை நிலுவை தொகையை வழங்கக் கோரி, தென்மண்டல காஸ் டேங்கர் லாரி உரிமையாளர்கள் நேற்று காலை வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில், மாலையில் போராட்டத்தை வாபஸ் பெற்றனர்.

நாமக்கல்லை தலைமையிடமாகக் கொண்டு தமிழகம், கேரளா, ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களை உள்ளடக்கிய தென்மண்டல எல்.பி.ஜி.காஸ் டேங்கர் லாரி உரிமையாளர்கள் சங்கம் செயல்பட்டு வருகிறது.

இச்சங்கத்தில் 4,500 காஸ் டேங்கர் லாரிகள் உள்ளன. இந்த லாரிகள் அனைத்தும் மத்திய அரசுக்குச் சொந்தமான ஐஓசி, பிபிசிஎல், எச்பிசிஎல் ஆகிய 3 எண்ணெய் நிறுவனங்களுக்குச் சொந்தமான சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து சமையல் எரிவாயுவை ஏற்றிக் கொண்டு பாட்டிலிங் மையங்களுக்கு எடுத்துச் செல்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் இயக்கப்படுகின்றன.




இதில், 1,000 எல்பிஜி காஸ் டேங்கர் லாரிகள் ஐஓசி நிறுவனத்துக்காக (இந்தியன் ஆயில் நிறுவனம்) இயக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிறுவனம் கடந்த சில ஆண்டுகளாக டேங்கர் லாரி உரிமையாளர்களுக்கு ரூ.50 கோடிக்கு மேல் வாடகை வழங்காமல் நிலுவையில் வைத்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், இந்த வாடகை நிலுவையை வழங்கக் கோரி நேற்று காலை முதல் ஐஓசி நிறுவனத்துக்கு இயக்கப்படும் காஸ் டேங்கர் லாரிகளில் லோடு ஏற்றாமல் ஆங்காங்கே நிறுத்தி வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

இதனிடையே, ஐஓசி அதிகாரிகள், டேங்கர் லாரி உரிமையாளர்கள் சங்க நிர்வாகிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, 2 நாட்களில் வாடகை நிலுவைத் தொகை வழங்குவதாக உறுதியளித்தனர். இதை ஏற்று, டேங்கர் லாரி உரிமையாளர்கள் நேற்று மாலை வேலைநிறுத்தப் போராட்டத்தை திரும்பப் பெறுவதாக அறிவித்தனர்.

## நடுக்கடலில் மீன் பிடித்தபோது தாக்குதல் நடத்திய இலங்கை கடற்கொள்ளையரை பிடித்த நாகை மீனவர்கள்

நாகப்பட்டினம்: ஜன.29-

கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த நாகை மீனவர்களுக்கும், இலங்கை கடற்கொள்ளையர்களுக்கும் மோதல் ஏற்பட்டது. இதில் ஒருவரை நாகை மீனவர்கள் பிடித்து வந்து போலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

மேலும் 2 பேர் படகு மூலம் தப்பினர். நாகை மாவட்டம் செருதூரிலிருந்து பாலமுருகன் என்பவருக்குச் சொந்தமான பைபர் படகில் கடந்த 25ம் தேதி சக்திமயில், அபிமன், பாலசுப்பிரமணியன், பழனிச்சாமி, கன்னியாகுமரி உவரி பகுதியை சேர்ந்த அபி ஆகியோர் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றனர்.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் அங்கு ஒரு படகில் இலங்கை கடற்கொள்ளையர்கள் 3 பேர் வந்தனர். மீனவர்களைத் தாக்கி, படகில் இருந்த மீன்கள், ஜிபிஎஸ் கருவி, செல்போன் ஆகிய வற்றை பறித்துக் கொண்டு, வலையையும் அறுக்க முற்



பட்டனர்.

அதை தடுக்க முயன்றபோது இருதரப்பினர் இடையே மோதல் ஏற்பட்டது. இதில், கடற்கொள்ளையர்களில் ஒருவரை செருதூர் மீனவர்கள் பிடித்தனர். மற்ற 2 பேர் படகில் தப்பினர்.

பிடிபட்ட நபர் இலங்கை காங்கேசன்துறை வழலையைச் சேர்ந்த அயந்தன் என்பதும், இவர் உள்ளிட்ட 3 பேரும், இதற்கு முன் செருதூர் மீனவர் மணிவாசகம் என்பவரது படகை மறித்து, அதிலிருந்தவர்களை தாக்கி உடமைகளை கொள்ளையடித்ததும் தெரியவந்தது.

பின்னர் அவரை செருதூர் மீன்பிடி இறங்கு தளத்துக்கு நேற்று அழைத்து வந்து கீழையூர் போலீஸாரிடம் மீனவர்கள் ஒப்படைத்தனர். கடலில் நடந்த மோதலில் காயமடைந்த அயந்தன், நாகை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அதேபோல, கடற்கொள்ளையர்கள் தாக்கியதில் காயமடைந்த செருதூர் மீனவர்கள் 7 பேரும் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதுகுறித்து பாதிக்கப்பட்ட மீனவர் மணிவாசகம் கூறும்போது, எங்கள் படகை வழிமறித்த இலங்கை கடற்கொள்ளையர்கள், படகில் இருந்த மீன்பிடி சாதனங்கள் மற்றும் மீன்களை பறித்துக் கொண்டனர்.

தொடர்ந்து நள்ளிரவு முதல் அதிகாலை 3 மணி வரை அடித்து உதைத்து கொடுமைப்படுத்தினர். எனது மகனின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி, இனி நீங்கள் வந்தால் பெட்ரோல் குண்டு வீசி கொன்று விடுவோம் என மிரட்டினர் என்றார்.

தாக்குதல் நடத்திய இலங்கை கடற்கொள்ளையர்களில் ஒருவரை தமிழக மீனவர்கள் பிடித்து வந்து தமிழக போலீஸாரிடம் ஒப்படைத்துள்ளது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**



# நீலகிரி மாவட்டம் உதகையில் மலர் கண்காட்சிக்காக தயாராகும் அரசு தாவரவியல் பூங்கா

ஊட்டி, ஏப்,29-

மலைகளின் அரசி என்று அழைக்கப்படும் நீலகிரி மாவட்டம் உலக சுற்றுலா வரைப்படத்தில் இடம் பெற்றுள்ள மாவட்டமாகும். இம்மாவட்டத்திற்கு ஆண்டுதோறும் கோடை காலத்தின் போது, குளு குளு சீசனை அனுபவிக்க ஏராளமான சுற்றுலா பயணிகள் உதகை வருவது வழக்கம். இவர்களை மகிழ்விப்பதற்காகவும், சுற்றுலாவை மேம்படுத்துவதற்காகவும் கோடையில் பல்வேறு விழாக்கள் சுற்றுலாத்துறை மற்றும் தோட்டக் கலைத்துறை மூலம் நடத்தப் படுகிறது.இதில், முக்கிய விழாவாக. உதகை அரசு தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சி நடைபெறுவது வழக்கம். இந்த மலர் கண்காட்சியை காண வெளி நாடுகள், வெளி மாநிலங்கள் மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து லட்சக் கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறனர் .இந்நிலையில் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் விதமாக இந்தாண்டு நடைபெறும் மலர் கண்காட்சிக்காக பூங்காவை தயார் செய்யும் பணிகள் தீவிரமாக நடைப்பெற்று வருகிறது. 40 ஆயிரம் மலர் தொட்டிகளில் மேரிகோல்டு, பேன்சி, பிக்கோனியா, சால்வியா, பெட்டுனியா, டெய்சி, டேலியா உட்பட பல லட்சம் மலர் செடிகள் நடவு செய்யப் பட்டுள்ளது.தற்போது செடிகளில் மலர்கள் பூக்கத் துவங்கியுள்ளன. இந்த தொட்டிகளில் மலர்கள் பூத்த நிலையில், அவைகளை பராமரிக்கும் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. இது தவிர பூங்காவில் அனைத்து பகுதிகளிலும் நடவு செய்யப்பட்டுள்ள 5 லட்சத்திற்கும் மேற்பட்ட மலர் செடிகளில் மலர்கள் பூக்கத் துவங்கியுள்ளன.

சுற்றுலா பயணிகள் வசதிக்காக பூங்காவில் உள்ள பெரிய புல் மைதானத்தில் பசுமை மாறாமல் காட்சியளிக்க பராமரிக்கும் பணியில் பூங்கா ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

# செலவு கணக்கு தாக்கல் செய்யாத 529 வேட்பாளர்கள் தகுதி நீக்கம்: தேர்தல் ஆணையம் நடவடிக்கை




புதுடெல்லி, ஏப்.29-

கடந்த மக்களவை மற்றும் சட்டப்பேரவைத் தேர்தல்களில் போட்டியிட்டு, நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் தேர்தல் செலவுக் கணக்குகளைத் தாக்கல் செய்யத் தவறிய 529 வேட்பாளர்களைத் தகுதி நீக்கம் செய்து தேர்தல் ஆணையம் உத்தரவு பிறப்பித்துள்ளது.இதையடுத்து, இவர்கள் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைத் தேர்தல்களில் வாக்களிக்கவோ, போட்டியிடவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.1951ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 10ஏன் கீழ் செலவு கணக்குகளை முறைப்படி தாக்கல் செய்யாத 529 வேட்பாளர்கள் மீது தகுதி நீக்க நடவடிக்கையை தேர்தல் ஆணையம் எடுத்துள்ளது. கடந்த மார்ச் 16ம் தேதி பிறப்பிக்கப்பட்ட இந்த உத்தரவின்படி, மேற்கு வங்கத்தைச் சேர்ந்த 4 பேர் உட்பட நாடு முழுவதும் உள்ள 529 சுயேச்சை வேட்பாளர்கள் தங்களது அடிப்படைத் தேர்தல் உரிமைகளை இழக்கின்றனர்.சட்ட விதிகளின்படி, தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொரு வேட்பாளரும் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் தங்களது முழுமையான தேர்தல் செலவுக் கணக்கைத் தாக்கல் செய்வது கட்டாயமாகும். அப்படி சமர்ப்பிக்க தவறுவோரை மூன்று ஆண்டுகளுக்குத் தகுதி நீக்கம் செய்யத் தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் உள்ளது.

இந்தத் தகுதி நீக்கமானது இந்தியத் தேர்தல் ஆணையத்தால் நடத்தப்படும் தேர்தல்களுக்கு மட்டுமே பொருந்தும். அதே நேரம், மாநிலத் தேர்தல் ஆணையங்களால் நடத்தப்படும் உள்ளாட்சி தேர்தல்களுக்கு இது பொருந்தாது. அதிகபட்சமாக உ.பி.யில் 120, கர்நாடகா 59, மத்திய பிரதேசம் 39, சத்தீஸ்கர் 36, தமிழ்நாடு 33, பிஹார் 28, தெலங்கானா, பஞ்சாப், உத்தராகண்ட் தலா 27, ஆந்திரா 25, கேரளா 16 உள்ளிட்ட மாநிலங்களின் 529 வேட்பாளர்கள் தகுதி நீக்கப் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

# தமிழகம் முழுவதும் அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை ஒரு லட்சத்தை தாண்டியது



சென்னை, ஏப்.29-

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் வரும் கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை ஒரு லட்சத்தை தாண்டியுள்ளதாக பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள் தெரி வித்தனர்.தமிழகத்தில் 37,554 அரசு பள்ளிகள் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் 52 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். தற்போது மாணவர்களின் நலன் கருதி கற்றல், கற்பித்தல் சார்ந்து எண்ணும் எழுத்தும், காலை உணவு, திறன்மிகு வகுப்பறைகள் உள்பட பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்கும் வகையில் கடந்த 2024ம் ஆண்டு முதல் மாணவர் சேர்க்கை முன்கூட்டியே அதாவது மார்ச் மாதமே தொடங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, வரும் கல்வி ஆண்டுக்கான (20262027) மாணவர் சேர்க்கையை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் கடந்த மார்ச் 1ம் தேதி சென்னையில் தொடங்கி வைத்தார். இதைத்தொடர்ந்து, மாநிலம் முழுவதும் உள்ள அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை நடைபெற்று வந்தது. இந்நிலையில் சேர்க்கை பெற்ற மாணவர்கள் விவரம் தற்போது வெளியாகியுள்ளது.

இதுகுறித்து பள்ளிக் கல்வித்துறை அதிகாரிகள் கூறும்போது, ‘‘அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் வரும் கல்வியாண்டுக்கு நேற்றைய நிலவரப்படி, ஒன்றாம் வகுப்பில் 97,737 பேர், 2 முதல் 8 வரையிலான வகுப்புகளில் 8,178 பேர், மழலையர் வகுப்புகளில் 6,796 பேர் என மொத்தம் ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 711 மாணவர்கள் சேர்க்கை பெற்றுள்ளனர். அரசுப் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்ப்பதால் கிடைக்கும் நலத்திட்டங்கள் குறித்து தமிழகம் முழுவதும் நகரம், கிராமப்புறங்களில் பொதுமக்களிடையே தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம்’’ என்றனர்.

# மங்கலதேவி கண்ணகி கோயில் சித்திரை முழு நிலவு விழா மற்றும் வீரபாண்டி கௌமாரியம்மன் திருக்கோயில் சித்திரை பெருந்திருவிழா முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம்



தேனி ஏப். 29-

தேனி மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், தமிழகேரள எல்லையில் அமைந்துள்ள மங்கலதேவி கண்ணகி கோயில் சித்திரை முழு நிலவு விழா மற்றும் வீரபாண்டி கௌமாரியம்மன் திருக்கோயில் சித்திரை பெருந்திருவிழா முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் .ரஞ்ஜீத் சிங், தலைமையில் நடைபெற்றது.தமிழகேரள எல்லையில் அமைந்துள்ள மங்கலதேவி கண்ணகி கோயில் சித்திரை முழு நிலவு விழா ஆண்டுதோறும் சித்ரா பௌர்ணமி தினத்தன்று தமிழகேரள மக்களால் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது, இவ்வாண்டு 01.05.2026 அன்று திருவிழா நடைபெற உள்ளதையொட்டி, இத்திருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்ய இருப்பதால் தமிழக மற்றும் கேரள பக்தர்கள் குமுளியில் இருந்து கோவிலுக்கு செல்லுவதற்கு ஏதுவாக போக்குவரத்து வசதி, சுகாதாரம், குடிநீர், தற்காலிக பந்தல்கள் மற்றும் கழிப்பிட வசதி, பாதைகள் செப்பனிடுதல் போன்ற பணிகள் மேற்கொள்வது குறித்து ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டது. அதனைத்தொடர்ந்துவீரபாண்டியில் அமைந்துள்ள அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில் சித்திரை பெருந்திருவிழா ஆண்டுதோறும் வெகுவிமர்சியாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு 12.05.2026 முதல் 19.05.2026 வரை 8 நாட்கள் திருவிழா நடைபெற உள்ளது. இத்திருவிழாவில் இலட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு, தரிசனம் செய்ய உள்ளார்கள். மேலும் தோரோட்ட திருவிழா 15.05.2026 அன்று நடைபெற உள்ளது. இத்திருவிழாவில் பக்தர்கள் எவ்வித சிரமமுமின்றி தரிசனம் செய்திட ஏதுவாக போக்குவரத்து வசதி, சுகாதார வசதி, தற்காலிக பந்தல்கள், தற்காலிக கழிப்பிட வசதி, இரு சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம், பக்தர்கள் வசதிக்காக ஆங்காங்கே குடிநீர் தொட்டிகள் அமைத்தல், அனைத்து முக்கிய சந்திப்புகள் மற்றும் பொதுமக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் அளவு மின் விளக்குகள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்வது தொடர்பாக அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மேலும், குழந்தைகளுக்கான பொழுது போக்கு அம்சங்களுடன் அமைக்கப்படவுள்ள இராட்டினங்கள் மற்றும் தற்காலிக கடைகள் அனைத்திற்கும் காப்பீடு (insurance) கட்டாயம் வேண்டும் என்றும், அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு இராட்டினங்கள் அமைக்கப்பட்ட பின்னரே அதனை இயக்குவதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேற்குறிப்பிட்ட திருவிழாக்களில் பக்தர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்குவது, தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவது, சுகாதாரத்துறை மற்றும் தீயணைப்புத்துறை, வனத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அலுவலர்களுடன் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. இத்திருவிழாக்களை சிறப்பாக கொண்டாட ஏதுவாக கூடுதல் முன்னேற்பாடு பணிகளை ஒருங்கிணைந்து மேற்கொள்ள மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர்.ப.ராஜகுமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.சினேஹாப்ரியா மாவட்ட வன அலுவலர். கிரண், பெரியகுளம் சார் ஆட்சியர் .ரஜத்பீடன் உதவி வனப்பாதுகாவலர் சாய்சரண் ரெட்டி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தமிழரசி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது).ராமகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இணை இயக்குநர் கலைச்செல்வி, மாவட்ட வழங்கல் அலுவலர் நல்லையா, நியமன அலுவலர் (உணவுபாதுகாப்புத்துறை) சசிதீபா உத்தம பாளையம் வருவாய் கோட்டாட்சியர் சையத் முகைதீன்இப்ராஹிம், செய்தி மக்கள் தொடர் அலுவலர் ஏ.எடிசன், வட்டாரப் போக்குவரத்து அலுவலர் மாணிக்கம் மற்றும் வருவாய்த்துறை, வனத்துறை, போக்குவரத்துத் துறை, சுகாதாரத்துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இந்திய அரசு மும்மொழிக் கொள்கை திட்டத்தைக் கைவிடவேண்டும்

## உலகத் திருக்குறள் கூட்டமைப்புத் தலைவர் மு. ஞானமூர்த்தி அறிக்கை



பெரம்பலூர், ஏப்.29-

இந்தியாவில் தேசியக் கல்விக் கொள்கை 2020(NEP 2020) பரிந்துரைக்கும் மும்மொழிக் கொள்கை (அந்தந்த மாநில மொழிகள், ஆங்கிலம், இந்தி அல்லது வேறொரு மொழி) திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு முயன்றுவருகிறது. இருமொழிக் கொள்கையை (தமிழ், ஆங்கிலம்) மட்டுமே இருக்க வேண்டும்.மும்மொழிக் கொள்கை எதிர்ப்பதற்குக் காரணம் இந்தி பேசாத மாநிலங்களில் இந்தி மொழியைக் கட்டாயமாக்குவது, அந்தந்த மாநில மொழிகளின் முக்கியத்துவத்தைக் குறைக்கும். கல்வி பொதுப்பட்டியலில் இருந்தாலும், மொழிக்கல்வி என்பது அந்தந்த மாநிலத்தின் கொள்கை முடிவாக இருக்க வேண்டும். ஏற்கனவே இரு மொழிகள் பயிலும் மாணவர்களுக்கு, மூன்றாவது மொழியைக் கற்பது தேவையற்ற பணிச்சுமையை ஏற்படுத்தும். வடமாநில மாணவர்கள் ஆங்கிலம் , இந்தி என இரண்டு மொழிகளைப் படித்தால் போதும். தென்மாநில மாணவர்கள் மட்டும் மூன்று மொழிகளைப் படிக்கவேண்டும் என்பது நியமற்றது. மேலும் தமிழ்நாட்டில் இருக்கும் இருமொழிக்கோள்கையே தொடரவேண்டும். பிறமொழிகளை விரும்பிப் படிப்பதில் தவறில்லை. திணித்தல் (கட்டாயமாக்குதல்) என்பதுதான் முரண்பாட்டை உருவாக்குகிறது.

புதுச்சேரியில் பிரெஞ்சுக்காரர்கள் அந்த மாநிலத்தை ஆட்சி செய்யத் தொடங்கியதிலிருந்து பிரஞ்சு மொழி இருந்து வந்தது. புதுச்சேரியிலிருந்து பிரான்ஸ் நாட்டில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வசித்து வருகின்றன. அவர்களுக்குப் பிரஞ்சு மொழி பயனுள்ளதாக இருந்தது. இப்போது மத்திய அரசு இந்த மொழியை எடுத்துவிட்டு இந்தியைக் கொண்டுவர முயல்கிறது. இதுபோன்ற முரண்பாடுகளால் நாட்டில் குழப்ப நிலை நீடிக்கிறது. எனவே மத்திய அரசு இந்தியாவில் நடைமுறையில் இருக்கும் இருமொழியைக்கொள்கையே தொடரவேண்டும் எனக்உலகத் திருக்குறள் கூட்டமைப்பு தலைவர் மு. ஞானமூர்த்தி கேட்டுக்கொண்டுள்ளார்.

# காமன்தொட்டி: 29ஆம் தேதி மின்நிறுத்தம்

கிருஷ்ணகிரி,, ஏப்.29-

கிருஷ்ணகிரி மாவட்டம் காமன்தொட்டி 110/3311 கி.வோ. துணை மின் நிலையத்தில் பராமரிப்பு பணிகள் காரணமாக இன்று காலை 29.04.2026 மின்நிறுத்தம் அறிவிப்பு.காலை 09.00 மணி முதல் மதியம் 02.00 மணி வரை மின் விநியோகம் நிறுத்தப்படும்.அட்டகுறுக்கி, காமன்தொட்டி உள்ளிட்ட பல பகுதிகள் மற்றும் சுற்றியுள்ள கிராமங்கள் பாதிக்கப்படும்.முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மின்வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது.

# கிருஷ்ணகிரிஅரசு பாலிடெக்னிக் கல்லூரியைசுற்றி“ட்ரோன்கள்” பறக்க தடை

கிருஷ்ணகிரி, ஏப்.29-

கிருஷ்ணகிரி அரசு பாலிடெக்னிக் கல்லூரியை சுற்றி “ட்ரோன்கள்” பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தமிழகத்தில் கடந்த 23ம் தேதி சட்டசபை தேர்தல் நடந்து முடிந்தது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஊத்தங்கரை (தனி) பர்கூர், கிருஷ்ணகிரி, வேப்பனஹள்ளி, ஓசூர் மற்றும் தளி ஆகிய 6 சட்டசபை தொகுதிகளில் ஓட்டுப்பதிவு முடிந்து, ஓட்டுப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் மாவட்ட ஓட்டு எண்ணும் மையமான, கிருஷ்ணகிரி அரசு பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் உள்ள பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் போலீசார் மற்றும் மத்திய பாதுகாப்பு படையினர் உள்ளிட்ட போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனவே ஓட்டு எண்ணிக்கை நாளான வருகிற மே மாதம் 4ம் தேதி வரை, கிருஷ்ணகிரி அரசு பாலிடெக்னிக் கல்லூரியை சுற்றியுள்ள பகுதிகளில் ட்ரோன் பறப்பதற்கு அனுமதியற்ற “No-Fly Zone” ஆக அறிவிக்கப்படுகிறது. மீறினால் சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு தனது செய்திக்குறிப்பில் மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.



# நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் சட்டமன்ற தேர்தல் வாக்குகள் எண்ணும் பணியில் ஈடுபடவுள்ள நுண்பார்வையாளர்கள் மேற்பார்வையாளர்கள் உதவியாளர்களுக்கு சீரற்றமயமாக்கல் பணி



உதகை ஏப்.29-

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026யில் பதிவான தபால் வாக்குகள் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பதிவான வாக்குகளை எண்ணும் பணியில் ஈடுபடவுள்ள நுண் பார்வையாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கான சீரற்றமயமாக்கல் பணி (Randomization), மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 வாக்கு எண்ணும் பணியானது வருகின்ற 04.05.2026 அன்று நடைபெறுகிறது. நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகமண்டலம் சட்டமன்ற தொகுதி, கூடலூர் சட்டமன்ற தொகுதி மற்றும் குன்னூர் சட்டமன்ற தொகுதி ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளில் பதிவான வாக்குகளை எண்ணும் பணியானது, வாக்கு எண்ணும் மையமான உதகை அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதனையொட்டி, நுண்பார்வையாளர்கள், மேற்பார்வையாளர்கள் உதவியாளர்களுக்கான சீரற்றமயமாக்கல் பணியானது இன்று நடைபெற்றது. மற்றும்இதில் 108 உதகமண்டலம் சட்டமன்ற தொகுதி, 109 கூடலூர் சட்டமன்ற தொகுதி, 110 குன்னூர் சட்டமன்ற தொகுதி ஆகிய மூன்று தொகுதியில் பதிவான தபால் வாக்கு எண்ணும் பணியில் 15 நுண்பார்வையாளர்களும், கூடுதலாக 3 நுண்பார்வையாளர்களும், 15 மேற்பார்வை யாளர்களும், 3 மேற்பார்வையாளர்களும், 30 உதவியாளர்களும், கூடுதலாக 6 உதவியாளர்களும், மின்னணு வாக்குப்பதிவு தலா இயந்திரத்தில் பதிவான வாக்குக்களை எண்ணும் பணியில் 42 நுண்பார்வயாளர்ளும், கூடுதலாக 9 நுண்பார்வையாளர்களும், 42 மேற்பார்வையாளர்கள், கூடுதலாக 9 மேற்பார்வை யாளர்களும், 42 உதவியாளர்களும், கூடுதலாக 9 உதவியாளர்களும் என மொத்தம் 225 நபர்களுக்கான சீரற்றமயமாக்கல் பணி (Randomization) நடைபெற்றது.மேலும், மின்னணு முறையில் பதிவான தபால் ஓட்டுக்களை எண்ணுவதற்காக ஒரு தொகுதிக்கு தலா இரண்டு நபர்கள் (மேற்பார்வையாளர் மற்றும் உதவியாளர்) என மொத்தம் 6 நபர்களும், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் 21 நபர்களும் இப்பணியில் ஈடுபடவுள்ளனர்.

இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) லோகநாயகி உட்பட பலர் உள்ளனர்.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இரண்டாம் போக நெல் விளைச்சல் அமோகம்

## நியாயமான விலை, கொள்முதல் நிலையம் அமைக்க விவசாயிகள் கோரிக்கை



கிருஷ்ணகிரி,ஏப்.29-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கே.ஆர்.பி. அணையில் இருந்து திறந்து விடப்பட்ட தண்ணீரை பயன்படுத்தி சுண்டேகுப்பம், அவதானப்பட்டி, மரிக்கம்பள்ளி, திம்மாபுரம், நரிமேடு, தளிஹள்ளி, கால்வேஹள்ளி உள்ளிட்ட 18 ஊராட்சிகளில் சுமார் 9 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. அணையில் இருந்து தண்ணீர் சரியான நேரத்தில் திறக்கப்பட்டதால், இரண்டாம் போக சாகுபடியில் விவசாயிகள் எதிர்பார்த்தபடி அமோக விளைச்சல் கிடைத்துள்ளது. தற்போது அறுவடை பணிகளில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இது குறித்து பாசன விவசாயிகள் சங்கத்தை சேர்ந்த விவசாயி சுப்பிரமணியன் கூறுகையில், "பெருந்தலைவர் காமராஜர் காலத்தில் கட்டப்பட்ட கே.ஆர்.பி. அணையின் மூலம் ஆண்டுதோறும் இரண்டு போகங்களில் நெல் சாகுபடி செய்து வருகிறோம். இந்தாண்டு இரண்டாம் போகத்தில் ஏக்கருக்கு 30 முதல் 40 மூட்டைகள் வரை நெல் கிடைக்கும் நிலை உள்ளது. ஆனால் பூச்சிமருந்துகள் மற்றும் தொழிலாளர்களின் கூலி அதிகரித்ததால் லாபம் குறைந்து, நஷ்டம் ஏற்படுகிறது" என்றார்.எனவே, ஒரு குவிண்டாலுக்கு ரூ.3500 என நெல் விலையை நிர்ணயிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், குறிப்பாக காவேரிப் பட்டினம் பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் அமைத்து, இடைத்தரகர்கள் இன்றி விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என்றும் விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

# சென்னை துறைமுகத்தில் காலிப்பணியிடங்கள்: ஏப்ரல் 30 வரை விண்ணப்பிக்க வாய்ப்பு



கிருஷ்ணகிரி, ஏப்.29

சென்னையில் உள்ள முதன்மை ஆணையர், சுங்கம் (பொது) அலுவலகத்தில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு தகுதியான முன்னாள் படைவீரர்கள் விண்ணப்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்பங்களை 30.04.2026க்குள் சமர்ப்பிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.இந்த அறிவிப்பின்படி, Greaser – 2 பணியிடங்கள், Seaman – 6 பணியிடங்கள், Tradesman – 2 பணியிடங்கள் என மொத்தம் 10 காலிப்பணியிடங்கள் உள்ளன. இதில் ஒவ்வொரு பிரிவிற்கும் சமூக ஒதுக்கீட்டின் அடிப்படையில் பணியிடங்கள் நிர்ணயி க்கப்பட்டுள்ளன.மேற்கண்ட பணியிடங்களுக்கு தகுதியும் விருப்பமும் உள்ள முன்னாள் படைவீரர்கள் https://chennaicus-toms.gov.in. என்ற இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க கடைசி தேதி 30.04.2026 என குறிப்பிடப்பட்டுள்ளது.தகுதியான விண்ணப்பதாரர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.



# கிருஷ்ணகிரி பாலிடெக்னிக் கல்லூரியில் EVM பாதுகாப்பு - காங்கிரஸ் வேட்பாளர் டாக்டர் செல்லக்குமார் ஆய்வு

கிருஷ்ணகிரி, ஏப்.29-

கிருஷ்ணகிரி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள ஓட்டு எண்ணும் மையத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVM) குறித்து, இந்திய கூட்டணி சார்பில் காங்கிரஸ் வேட்பாளர் டாக்டர் செல்லக்குமார் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஊத்தங்கரை (தனி), பர்கூர், கிருஷ்ணகிரி, வேப்பனஹள்ளி, ஒசூர், தளி ஆகிய 6 சட்டசபை தொகுதிகளுக்கான தேர்தல் முடிவடைந்ததைத் தொடர்ந்து, பயன்படுத்தப்பட்டணிகூஷிவிகள் அனைத்தும் கிருஷ்ணகிரி அரசு பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஓட்டு எண்ணும் மையத்திற்கு கொண்டு வரப்பட்டு, தனித்தனியாக 6 அறைகளில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

இந்த மையத்தில் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. EVMகள் வைக்கப்பட்டுள்ள அறைகளின் முன்பாக துப்பாக்கி ஏந்திய மத்திய பாதுகாப்புப் படையினர், துணை ராணுவப்படையினர் மற்றும் தமிழ்நாடு போலீசார் 24 மணி நேரமும் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், ஓட்டு எண்ணும் மையத்திற்கு மூன்றடுக்கு பாதுகாப்பு வளையம் அமைக்கப்பட்டுள்ளதுடன், அனுமதி அட்டையுடன் கூடியவர்களுக்கு மட்டுமே நுழைவு வழங்கப்படுகிறது.

கல்லூரி வளாகம் முழுவதும் மத்திய துணை ராணுவப்படை, தமிழ்நாடு சிறப்பு காவல்படை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட போலீசார் இணைந்து சுழற்சி முறையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மொத்தம் 297க்கும் மேற்பட்ட போலீசார் மற்றும் பாதுகாப்பு பணியாளர்கள் தொடர்ந்து கண்காணிப்பை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில், EVM-கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள அறைகள் மற்றும் சுற்றுப்புற பாதுகாப்பு ஏற்பாடுகளை டாக்டர் செல்லக்குமார் நேரில் பார்வையிட்டு, அதிகாரிகளிடம் விவரங்களை கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது, இந்திய கூட்டணி கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் பலரும் உடன் இருந்தனர். மாவட்ட திமுக துணைச் செயலாளர் கோவிந்தசாமி, கிழக்கு மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவர் பி.சி. சேகர், முன்னாள் மாவட்ட தலைவர் நாஞ்சில் ஜேசு, மாநில பொறுப்பாளர் ஆறுமுக சுப்பிரமணி, கலைப் பிரிவு மாவட்ட தலைவர் கோவிந்தசாமி, முன்னாள் நகர காங்கிரஸ் தலைவர் முபாரக், இளைஞர் அணி பொதுச் செயலாளர் விக்னேஷ் பாபு, சேவாதள மாவட்ட தலைவர் தோவராஜ், கிழக்கு மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவர் விவேகானந்தன், மாவட்ட செயலாளர் ஹரி, ஒசூர் மைஷா அக்பர், சக்கரவர்த்தி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# குடிநீர் குழாய் சேதம்: 4 பேர் மீது வழக்கு - 200 குடும்பங்களுக்கு பாதிப்பு, உடனடி சரிசெய்து நீர் வழங்க மாவட்ட ஆட்சியர் உத்தரவு



கிருஷ்ணகிரி, ஏப்.29-

கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கே. எட்டிப்பட்டி ஊராட்சி, கரடி கவுண்டனூர் கிராமத்தில் குடிநீர் பைப் லைன் சேதப்படுத்திய சம்பவத்தில் 4 பேர்மீது போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.கடந்த 26.04.2026 அன்று, கிராமத்தில் இரு தரப்பினருக்குள் ஏற்பட்ட தகராறு தீவிரமடைந்து, ஊராட்சிக்கு சொந்தமான குடிநீர் குழாய்கள் சேதப்படுத்தப்பட்டதாக கூறப்படுகிறது. இதனால் அந்தப் பகுதியில் வசிக்கும் சுமார் 200 குடும்பங்களுக்கு குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டது.இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ்குமார் உடனடி நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். அதன்பேரில் உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) மற்றும் மத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி உமா உள்ளிட்ட அதிகாரிகள் சம்பவ இடத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். தொடர்ந்து சேதமடைந்த குடிநீர் குழாய்கள் அவசரமாக பழுது பார்த்து, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மீண்டும் குடிநீர் வழங்கும் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டன.

மேலும் விசாரணையில், இளவரசன் என்பவர் தனது வீட்டிற்கு முறையற்ற குடிநீர் இணைப்பு எடுத்தது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனையே இந்த தகராறிற்குக் காரணமாக இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கே. எட்டிப்பட்டி ஊராட்சி செயலாளர் திரு பி. சரவணன், ஊத்தங்கரை வட்டம் சாமல்பட்டி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் அடிப்படையில், இளவரசன், ஜெயவேல், அரசு, ஜெய்சங்கர் ஆகிய 4 பேர்மீது குற்ற எண் 48/2026ன் கீழ் தமிழ்நாடு பொதுச் சொத்து சேதம் தடுப்பு சட்டம் (TNPPDL Act) பிரிவில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக போலீசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருவதாகவும், பொது சொத்துகளை சேதப்படுத்துவோருக்கு கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கார் ஓட்டுநரை சர்ஜிக்கல் கத்தியால் வெட்டிய தனியார் மருத்துவமனை இயக்குநர்கைது



சென்னை, ஏப்.29-

அயனாவரத்தில் மது போதையில் தகராறு செய்த கார் ஓட்டுநரை, சர்ஜிகல் கத்தியால் குத்திய தனியார் மருத்துவமனை இயக்குநர் கைது செய்யப்பட்டார்.திருமுல்லைவாயில் எம்ஜிஆர் நகர் பகுதியைச் சேர்ந்தவர் சத்யா (32). இவர் அயனாவரம் கே.ஹெச். சாலையில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் கடந்த மாதம் 20ம் தேதி கார் ஓட்டுநராகப் பணியில் சேர்ந்துள்ளார்.அவர் அடிக்கடி மது அருந்திவிட்டுப் பணிக்கு வந்ததாலும், சரியாக வேலைக்கு வராததாலும், மருத்துவமனை இயக்குநர் நவீன் கடந்த 4ம் தேதி அவரைப் பணியிலிருந்து நீக்கியுள்ளார்.இந்நிலையில், கடந்த 24ம் தேதி மாலை மருத்துவமனைக்கு மது போதையில் வந்த சத்யா, இயக்குநர் நவீனிடம் பணம் கேட்டு தகராறு செய்துள்ளார். அப்போது சத்யாவிடம் ரூ.4 ஆயிரத்தை கொடுத்துவிட்டு, மீதிப் பணத்தைக் காலையில் தருவதாகக் கூறியுள்ளார்.பணத்தைப் பெற்றுக் கொண்டு சென்ற சத்யா, மீண்டும் மது அருந்திவிட்டு வந்து, மருத்துவமனை ஊழியர்களிடமும் இயக்குநரிடமும் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. இதனால் ஆத்திரமடைந்த இயக்குநர் நவீன், அங்கிருந்த சர்ஜிக்கல் கத்தியை எடுத்து சத்யாவின் தோள்பட்டையில் வெட்டியதாக கூறப்படுகிறது. இதில் காயமடைந்த சத்யா, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.தகவலறிந்து சம்பவ இடத்துக்கு வந்த அயனாவரம் காவல் துறையினர் விசாரணை நடத்தினர். இரு தரப்பினரும் அளித்த புகாரின் அடிப்படையில், நவீன் மற்றும் சத்யா ஆகிய இருவர் மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.அதைத்தொடர்ந்து, மருத்துவமனை இயக்குநர் நவீனை போலீஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். சிகிச்சைக்குப் பின் கார் ஓட்டுநர் சத்யாவையும் கைது செய்ய உள்ளதாகப் போலீஸார் தெரிவித்தனர்.

# சூளகிரி: 29ஆம் தேதி மின்நிறுத்தம்

கிருஷ்ணகிரி, ஏப்.29-

கிருஷ்ணகிரி மாவட்டம்சூளகிரி 110/3311 கி.வோ. துணை மின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் காரணமாக இன்று 29.04.2026 (புதன்கிழமை) மின்நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது.காலை 09.00 மணி முதல் மதியம் 02.00 மணி வரை மின் விநியோகம் நிறுத்தப்படும். சூளகிரி நகர் உள்ளிட்ட பல பகுதிகள் மற்றும் சுற்றியுள்ள கிராமங்கள் பாதிக்கப்படும்.பொதுமக்கள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மின்வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது.



# தங்கம் விலை பவுனுக்கு ரூ.1,040 குறைவு: இன்றைய சந்தை நிலவரம் என்ன?

சென்னை, ஏப்.29-

22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று (ஏப்.28) சென்னையில் பவுனுக்கு ரூ.1,040 எனக் குறைந்தது. வெள்ளி விலை கிலோவுக்கு ரூ.5,000 எனக் குறைந்துள்ளது.

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றம், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு, உலக பங்குச் சந்தை முதலீடு உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது.

இந்நிலையில், தங்கம் விலை கடந்த சில நாட்களாகவே ஏற்ற இறக்கத்துடன் இருந்து வருகிறது. கடந்த 20 முதல் 24ம் தேதி வரையில் தங்கம் விலை பவுனுக்கு ரூ.2,080 என விலை குறைந்தது. கடந்த சனிக்கிழமை அன்று பவுனுக்கு ரூ.800, திங்கட்கிழமை அன்று பவுனுக்கு ரூ.240 என தங்கம் விலை உயர்ந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த சூழலில், தங்கம் விலை மீண்டும் குறைந்துள்ளது. சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று (ஏப்.28) கிராமுக்கு ரூ.130 குறைந்து ஒரு கிராம் ரூ.14,100க்கும், பவுனுக்கு ரூ.1,040 குறைந்து ஒரு பவுன் ரூ.1,12,800க்கும் விற்பனையாகிறது.

24 காரட் தங்கம் கிராமுக்கு ரூ.142 என விலை குறைந்து, ஒரு கிராம் ரூ.15,382க்கும், 18 காரட் தங்கம் கிராமுக்கு ரூ.110 என விலை குறைந்து, ஒரு கிராம் ரூ.11,760க்கும் விற்பனையாகிறது. வெள்ளி விலையை பொறுத்தவரையில் கிராமுக்கு ரூ.5 குறைந்து, ஒரு கிராம் ரூ.265க்கும், கட்டி வெள்ளி கிலோவுக்கு ரூ.5,000 குறைந்து, ஒரு கிலோ ரூ.2,65,000க்கும் விற்பனையாகிறது.

# தூத்துக்குடி, மதுரை, திருச்சி, கோவையில் இருந்து சென்னைக்கு விமான கட்டணம் பல மடங்கு உயர்வு



சென்னை, ஏப்.29-

தமிழக சட்டப்பேரவை தேர்தல் கடந்த 23ம் தேதி நடைபெற்றது. சென்னை, புறநகர் பகுதிகளில் வசிக்கும் லட்சக்கணக்கான மக்கள் தேர்தலில் வாக்களிப்பதற்காக சொந்த ஊர்களுக்குச் சென்றனர். வாக்களித்த பின்னர் நேற்று முன்தினம் மாலை முதல் சென்னைக்கு வரத் தொடங்கினர். பேருந்து, ரயில்களில் டிக்கெட் கிடைக்காதவர்கள் விமானங்களில் சென்னை செல்வதற்கு திட்டமிட்டனர்.

நேற்று முன்தினம் இரவில் தூத்துக்குடி, மதுரை, திருச்சி, கோவை ஆகிய விமானங்களில் பயணிகள் கூட்டம் அலைமோதியது.ஓரிரு விமானங்களில் மட்டுமே, சில டிக்கெட்டுகள் இருந்தன. அந்த டிக்கெட் கட்டணம் பலமடங்கு அதிகரித்திருந்தது. தூத்துக்குடி சென்னைக்கு வழக்கமாக ரூ.5,354 இருந்த கட்டணம் நேற்று முன்தினம் இரவுமுதல் நேற்று காலை வரை ரூ.17,089 வரையும், மதுரை சென்னைக்கு ரூ.5099 ஆக இருந்த கட்டணம் ரூ.32,508 வரையும், திருச்சி சென்னைக்கு ரூ.4,551 ஆக இருந்த கட்டணம் ரூ.14,310 வரையும், கோவை சென்னைக்கு ரூ.4,634 ஆக இருந்த கட்டணம் ரூ.11,149 வரையும் உயர்ந்திருந்தன.

விமான டிக்கெட் கட்டண உயர்வு, தேர்தலுக்கு வாக்களிக்க சொந்த ஊர்களுக்குச் சென்ற மக்களை அதிர்ச்சி அடையச் செய்தது.

# தேனியில் வாக்கு எண்ணிக்கை நாளன்று தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம்



தேனி ஏப்.29-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, வாக்கு எண்ணிக்கை நாளன்று தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ் ஜீத்சிங், தலைமையில் நடைபெற்றது. இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் ஒரே கட்டமாக 23.04.2026 அன்று நடைபெற்றுள்ளது. மேலும், வாக்கு எண்ணிக்கை வருகின்ற 04.05.2026 அன்று நடைபெற உள்ளது.அதன்படி, தேனி மாவட்டத்தில் உள்ள 198ஆண்டிப்பட்டி, 199பெரியகுளம் (தனி), 200போடிநாயக்கனூர் மற்றும் 201கம்பம் ஆகிய நான்கு சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை மையமாக தேனி கம்மவார் சங்கம் பொறியியல் கல்லூரி தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, வாக்கு எண்ணிக்கை நாளன்று(04.05.2026) தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் வாக்கு எண்ணிக்கை தொடர்பாக மேற்கொள்ளப்படவேண்டிய பணிகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. மேலும், இக்கூட்டத்தில், வாக்கு எண்ணிக்கையின் போது, தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளை கடைபிடிக்குமாறும், வேட்பாளர்கள் மற்றும் வாக்கு எண்ணிக்கை மைய முகவர்களை அனுமதிப்பது, வாக்கு எண்ணிக்கையின் போது 17நீ படிவங்களை சரிபார்ப்பது, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை கையாளும்முறை, தபால் வாக்குகள் எண்ணிக்கை போன்ற பணிகளில் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.சினேஹாப்ரியாமாவட்ட வருவாய் அலுவலர்.ப.ராஜகுமார், தேர்தல் நடத்தும் அலுவலர் / பெரியகுளம் சார் ஆட்சியர்.ரஜத் பீடன், தேர்தல் நடத்தும் அலுவலர் / தனித்துணை ஆட்சியர். கவிதா, தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட வழங்கல் அலுவலர் நல்லையா, தேர்தல் நடத்தும் அலுவலர் / உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் சையத் முகைதீன் இப்ராஹிம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் .காசி (தேர்தல்), வட்டாட்சியர் (தேர்தல்) .சுருளி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் .ஏ.எடிசன் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் / வட்டாட்சியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மானாமதுரை ஆகாஷ் டெலிசன் படுகொலை: 57வது நாள் கண்டன ஆர்ப்பாட்டம் மே 3ல் திரள அழைப்பு

மானாமதுரை ஏப்.29-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை கிருஷ்ணராயபுரம் பகுதியைச் சேர்ந்த பட்டதாரி இளைஞர் ஆகாஷ் டெலிசன் படுகொலை செய்யப்பட்ட விவகாரத்தில், நீதி கோரி வரும் மே மாதம் 3ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. ஆர்ப்பாட்டத்தின் பின்னணி மற்றும் கோரிக்கைகள்:



ஆகாஷ் டெலிசன் படுகொலையில் தொடர்புடையதாகக் கூறப்படும் திருப்புவனம் ஆய்வாளர் திலீபன், மானாமதுரை சார்பு ஆய்வாளர் குகன் உள்ளிட்ட 16 பேரின் பெயர்களை முதல் தகவல் அறிக்கையில் (FIR) சேர்க்காததைக் கண்டித்து இந்த போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இது தொடர்பாக மதுரை உயர்நீதிமன்றம், இந்த மரணம் சாதிய வன்கொடுமையுடன் நடந்த கொலைதான் என்பதை ஏற்றுக்கொண்டு, வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் கொலை வழக்காக (பிரிவு 302) பதிவு செய்ய உத்தரவிட்டும், இதுவரை சம்பந்தப்பட்ட 16 காவலர்களைக் கைது செய்யாத தமிழக அரசு, காவல்துறை மற்றும் CBCID பிரிவினரைக் கண்டித்து இந்த 57 வது நாள் போராட்டம் நடைபெறுகிறது. ஆர்ப்பாட்டம் நடைபெறும் நாள்:மே 3, 2026 (ஞாயிற்றுக்கிழமை) நேரம்:காலை 09:00 மணி,இடம்:மானாமதுரை பழைய பேருந்து நிலையம்இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் அனைத்து தேவேந்திரகுல சமூக கிராமங்கள், இயக்கங்கள் மற்றும் தமிழ் சமூக உறவுகள் பெருந்திரளாக அணிதிரண்டு பங்கேற்க வேண்டும் என "ஆகாஷ் டெலிசன் படுகொலை நீதிக்கான போராட்டக் குழு மானாமதுரை "சார்பாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# அமைச்சர் நேருவுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்ய உத்தரவிடவில்லை: உயர் நீதிமன்றம்

சென்னை, ஏப்.29-

"நகராட்சி நிர்வாக துறையில் அதிகாரிகள் நியமனத்தில் நடந்த முறைகேடுகள் தொடர்பாக, அமைச்சர் நேருவுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என குறிப்பிட்டு உத்தரவில் கூறவில்லை. முறைகேடு தொடர்பாக வழக்குப் பதிவு செய்யவே உத்தரவிடப்பட்டது" என சென்னை உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

நகராட்சி நிர்வாக துறையில், 2538 உதவி மற்றும் இளநிலை பொறியாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் நியமனத்துக்கு 634 கோடி ரூபாய் லஞ்சம் பெறப்பட்டுள்ளதாக கூறி, இதுசம்பந்தமாக



வழக்குப்பதிவு செய்யும்படி, தமிழக டி.ஜி.பி.க்கு, அமலாக்கத் துறை கடிதம் அனுப்பியிருந்தது.

இந்த கடிதத்தின் அடிப்படையில், வழக்குப்பதிவு செய்ய லஞ்ச ஒழிப்புத் துறைக்கு உத்தரவிடக் கோரி அதிமுக எம்.பி. இன்பதுரை சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், அமலாக்கத் துறை கடிதத்தின் அடிப்படையில் உடனடியாக வழக்குப் பதிவு செய்ய லஞ்ச ஒழிப்புத் துறைக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்யாத லஞ்ச ஒழிபுத் துறைக்கு எதிராக, இன்பதுரை தரப்பில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இதேபோல, அதிகாரிகள் நியமன முறைகேடு தொடர்பாக வழக்குப்பதிவு செய்ய பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என தமிழக அரசும், அமைச்சர் நேரு தரப்பிலும் மறு ஆய்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த அனைத்து வழக்குகளும், தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி. அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்த போது, நேரு தரப்பில், வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கும் முன் தனது தரப்பில் வாதங்களை முன் வைக்க வாய்ப்பளிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், அமைச்சர் நேருவுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என குறிப்பிட்டு உத்தரவில் கூறவில்லை. முறைகேடு தொடர்பாக வழக்குப் பதிவு செய்யவே உத்தரவிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்தனர்.

மேலும், இந்த வழக்கில் விரிவான வாதங்கள் வைக்க வேண்டும் என்பதால், விசாரணையை கோடை விடுமுறைக்கு பின் தள்ளிவைக்கலாம் என நீதிபதிகள் தெரிவித்தனர். அதுவரை வழக்குப்பதிவு செய்ய பிறப்பித்த உத்தரவை நிறுத்தி வைக்க வேண்டும் என நேரு தரப்பில் கோரப்பட்டது. இதையடுத்து, எந்த உத்தரவும் பிறப்பிக்காமல் தமிழக அரசு மற்றும் நேருவின் மறு ஆய்வு மனுக்களையும், இன்பதுரையின் நீதிமன்ற அவமதிப்பு வழக்கையும் ஜூன் 4 வது வாரத்துக்கு நீதிபதிகள் தள்ளிவைத்தனர்.

# மானாமதுரை சித்திரை திருவிழா

## கோலாகலமாக நடைபெற்ற ஆனந்தவல்லி சோமநாதர் திருக்கல்யாணம்

மானாமதுரை ஏப்.29-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஆனந்தவல்லி சோமநாதர் ஆலயத்தில் நடைபெற்று வரும் சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்வான திருக்கல்யாண வைபவம் நேற்று (ஏப். 28) பக்தர்கள் திரளாக கலந்து கொண்ட நிலையில் கோலாகலமாக நடைபெற்றது. திருக்கல்யாணத்தை முன்னிட்டு நேற்று இரவு சோமநாதர் பிரியாவிடையுடன் ரிஷப வாகனத்தில் எழுந்தருளி வீதியுலா வந்தார். ஆனந்தவல்லி அம்மனும் தனி ரிஷப வாகனத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.நேற்று காலை 10.35 மணி முதல் 11 மணிக்குள் சுப முகூர்த்தத்தில் ஆனந்தவல்லி அம்மனுக்கும் சோமநாதருக்கும் திருக்கல்யாணம் சிறப்பாக நடைபெற்றது. இதில்





ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.கடந்த ஏப்ரல் 21ஆம் தேதி தொடங்கிய சித்திரை திருவிழாவில் சமணர்கள் கழுவேற்றம் உள்ளிட்ட பல்வேறு மண்டகப்படிகள் நடைபெற்றுள்ளன. திருவிழாவின் அடுத்த முக்கிய நிகழ்வான தேரோட்டம் இன்று (ஏப். 29) நடைபெற உள்ளது.

# சுதந்திர நாடுகள் மீது தனது கொள்கையை திணிக்கும் நிலையில் இனி அமெரிக்கா இல்லை: ஈரான்

தெஹ்ரான், ஏப்.29-

பிறநாடுகள் என்ன செய்ய வேண்டும் என்பதை அமெரிக்காவால் இனி திணிக்க முடியாது. சுதந்திரமான நாடுகள் மீது தனது கொள்கையை திணிக்கும் நிலையில் இனி அமெரிக்கா இல்லை." என்று ஈரான் பாதுகாப்பு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரெசா தலாய் நிக் தெரிவித்துள்ளார்.

மேற்கு ஆசிய போரை முடிவுக்குக் கொண்டு வர அமெரிக்காவுக்கு ஈரான் மூன்று நிபந்தனைகளை விதித்துள்ள நிலையில், ஈரான் பாதுகாப்பு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரெசா தலாய் நிக் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது அவர், "பிறநாடுகள் என்ன செய்ய வேண்டும் என்பதை அமெரிக்காவால் இனி திணிக்க முடியாது. சுதந்திரமான நாடுகள் மீது தனது கொள்கையை திணிக்கும் நிலையில் இனி அமெரிக்கா இல்லை. தனது சட்டவிரோத, பகுத்தறிவற்ற கோரிக்கைகளை கைவிட வேண்டும் என்ற ஈரானின் கோரிக்கையை அமெரிக்கா ஏற்கும்" என தெரிவித்தார்.



இந்நிலையில், அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே அதிகரித்து வரும் பதற்றங்கள், உலகின் அனைத்து நாடுகளையும் பாதித்து வருவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக பேசியுள்ள ஐ.நா. பொதுச் செயலாளர் ஆன்டோனியோ குட்டரெஸ், "அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே அதிகரித்து வரும் பதற்றங்களால் கடல்சார் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளன. ஒவ்வொரு கடற்கரை நாட்டையும் மட்டுமல்லாது, நிலத்தால் சூழப்பட்ட நாட்டையும் இது பாதிக்கிறது. உலக அளவில் அதிகரித்து வரும் பிளவுகள் நம்பிக்கையை அரித்து, சர்வதேச சட்டத்துக்கு சவால் விடுத்து கூட்டுப் பாதுகாப்பின் அடித்தளங்களை சிதைக்கின்றன" என தெரிவித்துள்ளார்.

ஈரான் அமெரிக்கா இடையே போர் நிறுத்தம் அமலில் இருந்தாலும் அது நிச்சயமற்றதாக இருப்பதால், கச்சா எண்ணெய் விலை சர்வதேச அளவில் 2.8% உயர்ந்து ஒரு பீப்பாய் பிரெண்ட் கச்சா எண்ணெய் 109 அமெரிக்க டாலருக்கு விற்பனையாகிறது. ஹார்முஸ் ஜலசந்தி பெரும்பாலும் கடக்க முடியாத நிலையில் உள்ளதால் அந்த பகுதியில் அசாதாரண சூழலே நிலவி வருவதாக புளூம்பெர்க் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் முதல் ஹார்முஸ் ஜலசந்தி முடக்கப்பட்டுள்ளது. உலகில் எண்ணெய் விநியோகத்தில் ஐந்தில் ஒரு பங்கைக் கொண்டிருக்கும் இந்த கடற் பாதை முடக்கப்பட்டுள்ளதால், பல நாடுகளில் எண்ணெய் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. எனவே, மோதலை விரைவாக முடிவுக்குக் கொண்டு வர இந்தியா உட்பட பல நாடுகள் ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகின்றன.



# காஸ் டேங்கர் லாரி உரிமையாளர்கள் காலையில் வேலை நிறுத்தம் மாலையில் திரும்ப பெற்றனர்

நாமக்கல், ஏப்.29-

வாடகை நிலுவை தொகையை வழங்கக் கோரி, தென்மண்டல காஸ் டேங்கர் லாரி உரிமையாளர்கள் நேற்று காலை வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடு பட்ட நிலையில், மாலையில் போராட்டத்தை வாபஸ் பெற்றனர்.நாமக்கல்லை தலைமையிடமாகக் கொண்டு தமிழகம், கேரளா, ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களை உள்ளடக்கிய தென் மண்டல எல்.பி.ஜி.காஸ் டேங்கர் லாரி உரிமையாளர்கள் சங்கம் செயல்பட்டு வருகிறது.இச்சங்கத்தில் 4,500 காஸ் டேங்கர் லாரிகள் உள்ளன. இந்த லாரிகள் அனைத்தும் மத்திய அரசுக்குச் சொந்தமான ஐஓசி, பிபிசிஎல், எச் பிசிஎல் ஆகிய 3 எண்ணெய் நிறுவனங்களுக்குச் சொந் தமான சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து சமையல் எரி வாயுவை ஏற்றிக் கொண்டு பாட்டிலிங் மையங்களுக்கு எடுத்துச் செல்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் இயக் கப்படுகின்றன.

இதில், 1,000 எல்பிஜி காஸ் டேங்கர் லாரிகள் ஐஓசி நிறுவனத்துக்காக (இந்தியன் ஆயில் நிறுவனம்) இயக் கப்பட்டு வருகின்றன.இந்த நிறுவனம் கடந்த சில ஆண் டுகளாக டேங்கர் லாரி உரிமையாளர்களுக்கு ரூ.50 கோடிக்கு மேல் வாடகை வழங்காமல் நிலுவையில் வைத்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், இந்த வாடகை நிலுவையை வழங்கக் கோரி நேற்று காலை முதல் ஐஓசி நிறுவனத்துக்கு இயக் கப்படும் காஸ் டேங்கர் லாரிகளில் லோடு ஏற்றாமல் ஆங்காங்கே நிறுத்தி வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.இதனிடையே, ஐஓசி அதிகாரிகள், டேங் கர் லாரி உரிமையாளர்கள் சங்க நிர்வாகிகளுடன் பேச் சுவார்த்தை நடத்தினர். அப்போது, 2 நாட்களில் வாடகை நிலுவைத் தொகை வழங்குவதாக உறுதியளித்தனர். இதை ஏற்று, டேங்கர் லாரி உரிமையாளர்கள் நேற்று மாலை வேலைநிறுத்தப் போராட்டத்தை திரும்பப் பெறுவதாக அறிவித்தனர்.

# தேர்தலுக்காக அவசர கதியில் தொடங்கப்பட்ட சாலை அமைக்கும் பணி பாதியிலேயே நிறுத்தம்

தாம்பரம், ஏப்.29-

தாம்பரம் அருகே அகரம்தென் ஊராட்சியில் தேர்தலுக்காக அவசர கதியில் தொடங்கப்பட்ட சாலை அமைக்கும் பணி தொடங்கிய கையோடு நிறுத்தப்பட்டது. இதனால் பொதுமக்களின் அன்றாடப் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்படுகிறது. செங்கல்பட்டு மாவட்டம், பரங்கிமலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் கிராம ஊராட்சியில் ஜெ.ஜெ. நகரில் 100க்கும் மேற்பட்ட குடும்பங்களில் மக்கள் வசித்து வருகின்றனர். அங்கு கடந்த 20 ஆண்டுகளுக்கு முன் சாலை அமை க்கப்பட்டது. அதையடுத்து, சாலைகள் அமைக்கப்படாததால், சாலையில் ஜல்லிகள் பெயர்ந்து குண்டும், குழியுமாக காட்சியளித்தன. மேலும், சாலை மேடாக இருந்ததால், சாலையை பயன்படுத்தும் மக்கள், இருசக்கர வாகன ஓட்டிகள் பெரிதும் சிரமப்பட்டு வந்தனர்.இந்நிலையில், தேர்தல் தேதி அறிவிப்புக்கு முன் பல லட்சம் செலவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி தொடங்கின. தரமற்ற முறையில் தொடங்கப்பட்ட இப்பணி பொதுமக்கள் கேள்வி எழுப்பியதால் ஒப்பந்ததாரர் பாதியிலேயே நிறுத்தி சென்று விட்டதாக



கூறப்படுகிறது.தேர்தல் நேரம் என்பதால் அதிகாரிகள் கண்டுகொள்ளவில்லை. சாலைப் பணி அரை குறையாக நிறுத்தப்பட்டதால், தற்போது பொது மக்கள், வாகன ஓட்டிகள் அவதிப்படுகின்றனர். இந்த பிரச்சினைக்கு சம்பந்தப்பட்ட துறையினர் விரைவாக, உரிய தீர்வு காண வேண்டும் என பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். இது குறித்து, அந்த பகுதியை சேர்ந்த ராஜாராம் கூறியது: சாலை சீரமைக்கும் பணி தொடங்கியதால் மகிழ்ச்சியடைந்தோம்.

இதில் முதல் கட்டமாக, பழைய சாலை பெயர்த்து எடுக்கப்பட்டது. அதன் பின்னர், ஜல்லிகற்கள் கொட்டப்பட்டன. ஆனால், அதன் பிறகு எந்த பணியும் நடைபெறவில்லை. தேர்தலில் வாக்கு வாங்க வேண்டும் என்பதால் பணிகள் தரமில்லாமல் அவசர கதியில் பணி தொடங்கியது.ஆனால், திடீரென சாலை பணி நிறுத்தப்பட்டது. சாலையில் ஜல்லி கற்கள் சிதறி கிடப்பதால் பைக் மற்றும் சைக்கிளில் செல்லும் வாகன ஓட்டிகள் தடுமாறி கீழே விழுந்து காயம் அடைகின்றனர்.மேலும், நடந்து செல்பவர்கள் கால்களையும் ஜல்லி கற்கள் பதம் பார்க்கின்றன. வாகனங்கள் செல்லும் போது புழுதி பறப்பதால், அந்த பகுதி புகை மண்டலம் போல் காட்சி அளிக்கிறது. இதன் காரணமாக, அந்த பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். எனவே, பாதியில் நிறுத்தப்பட்ட சாலைப் பணியினை தொடங்க மாவட்ட ஆட்சியர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கிறோம் என்றார்.

# மேற்கு வங்க தேர்தல் களத்தில் மக்களிடம் நீதி கேட்கும் மகள்களை இழந்த 2 பெண்கள்

கொல்கத்தா, ஏப்.29-

மேற்கு வங்கத்தில் முதல் கட்ட சட்டப்பேரவைத் தேர்தல் நிறைவடைந்து, நாளை 2ம் கட்ட தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. இதில் இரு பெண் வேட்பாளர்களின் ஆவேச பிரச்சாரம் மக்களிடையே பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.பெண் மருத்துவர் கொலை: கடந்த 2024 ல் ஆக.9ம் தேதி மேற்கு வங்க தலைநகர் கொல்கத்தாவில் ஆர்.ஜி.கர் அரசு மருத்துவமனையில் இரவு பணியில் இருந்த 31 வயதான பெண் மருத்துவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்பட்டார்.

அந்த பெண் மருத்துவர் தற்கொலை செய்து கொண்டதாக மருத்துவமனை நிர்வாகம் பெற்றோரிடம் கூறியது. மேலும் கொலையை மறைக்க





மருத்துவமனை நிர்வாகம் பல்வேறு வழிகளைக் கையாண்டது. ஆனால் மேற்குவங்கம் முழுவதும் மருத்துவக் கல்லூரி மாணவர்கள், மருத்துவர்கள் கொதித்தெழுந்து தொடர் போராட்டங்களை நடத்தினர். இதன்காரணமாக பெண் மருத்துவர் மரணம் குறித்து தீவிர விசாரணை நடத்தப்பட்டது. இதில் அவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டது உறுதி செய்யப்பட்டது.

நீதிமன்ற உத்தரவின் பேரில் கொலை வழக்கு சிபிஐக்கு மாற்றப்பட்டது. ஆனால் கொலை நடந்த இடத்தில் முக்கிய ஆதாரங்கள் அழிக்கப்பட்டு இருந்ததால் சிபிஐ அதிகாரிகளால் முழு உண்மைகளை வெளிச்சத்துக்கு கொண்டு வர முடியவில்லை. இந்த வழக்கில் மேற்குவங்க காவல் துறையில் தன்னார்வலராக பணியாற்றிய சஞ்சய் ராய்க்கு மட்டும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது. ஆளும் திரிணமூல் காங்கிரஸ் தலைவர்களின் ஆதரவுடன் பலர் வழக்கில் இருந்து தப்பிவிட்டதாகக் கூறப்படுகிறது.

பெண் மருத்துவரின் கொலைக்கு நீதி கேட்டு அவரது தாய் ரத்னா தேவ்நாத் பல்வேறு போராட்டங்களை முன்னின்று நடத்தினார். அவருக்கு பாஜக ஆதரவுக் கரம் நீட்டியது. தற்போது பனிஹாட்டி சட்டப்பேரவைத் தொகுதியில் பாஜக வேட்பாளராக அவர் முன்னிறுத்தப்பட்டு உள்ளார். சில நாட்களுக்கு முன்பு ரத்னா தேவ்நாத்துக்கு ஆதரவாக பிரதமர் மோடி பிரச்சாரம் செய்தார். அப்போது பிரதமர் கூறும்போது, "பாலியல் வன்கொடுமை குற்றவாளிகள் அனைவரும் மே 4ம் தேதி வாக்கு எண்ணிக்கைக்குப் பிறகு நீதியின் முன்பு நிறுத்தப்படுவார்கள்" என்று உறுதி அளித்தார்.குண்டு வெடிப்பில் சிறுமி.. கடந்த ஆண்டு கலிகஞ்ச் சட்டப்பேரவைத் தொகுதியில் இடைத்தேர்தல் நடைபெற்றது. இதில் திரிணமூல் காங்கிரஸ் வெற்றி பெற்றது. அப்போது ஆளும் கட்சியினர் வெற்றிவிழா ஊர்வலத்தை நடத்தினர். சிலர் நாட்டு வெடிகுண்டுகளை வீசினர். இதில் ஒரு குண்டு குடியிருப்பு பகுதிக்குள் விழுந்து வெடித்துச் சிதறியது. இதில் தமன்னா சாதுன் (9) என்ற சிறுமி உயிரிழந்தார். இந்த சிறுமியின் தாய் சபினா யாஸ்மின், கலிகஞ்ச் தொகுதியில் மார்க்சிஸ்ட் வேட்பாளராக களமிறக்கப்பட்டு உள்ளார்.பிரச்சாரத்தின்போது அவர் கூறும்போது, "வன்முறையை எதிர்த்தும், குழந்தைகளின் பாது காப்பை முன்னிறுத்தியும் தேர்தலில் போட்டியிடுகிறேன். எனது மகளை போன்று வேறு எந்த குழந்தையும் கொடூரமாக உயிரிழக்கக்கூடாது. எனது மகளின் உயிரிழப்புக்காக மக்கள் மன்றத்தில் நீதி கேட்டு நிற்கிறேன்" என்று தெரிவித்தார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161